செ. வெ. எண்: 98 நாள்: 09.08.2011

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 9.8.2011**

விருதுநகர் மாவட்டம், விருதுநகர் பஜார் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. M.மணி என்பவர் பணி நிமித்தமாக 30.7.2011 அன்று தேசிய நெடுஞ்சாலை–7, மதுரை – சாத்தூர், இனாம்ரெட்டியப்பட்டி சாலை சந்திப்பில் போக்குவரத்தை சீர் செய்து கொண்டிருந்த போது, அதே சாலையில் வேகமாக வந்த வாகனம் மோதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிக்க துயருற்றேன்.

திரு M. மணி அவர்களின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது மனைவிக்கும், குடும்பத்தாருக்கும் எனது இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடமையாற்றிக் கொண்டிருந்த போது காலமான தலைமைக் காவலர் திரு M. மணி அவர்களின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து இரண்டு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

<u>விருதுநகர் மாவட்டம், விருதுநகர் பஜார் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்த திரு. M.மணி அவர்கள் மறைவின் காரணமாக அன்னாரின் மனைவி திருமதி ம.தனலட்சுமி அவர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அனுப்பிய இரங்கல் செய்தி பின்வருமாறு:-</u>

“தங்கள் கணவர், தலைமைக் காவலர் திரு. M.மணி அவர்கள் 30.7.2011 அன்று போக்குவரத்துக் காவல் பணியில் ஈடுபட்டிருந்த போது சாலை விபத்தில் காலமானார் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த துயரம் அடைந்துள்ளேன்.

இந்தத் துயரச் சம்பவத்தினால் ஈடு செய்ய முடியாத இழப்பு தங்களுக்கு ஏற்பட்டுள்ள போதிலும், இந்தத் துயரத்தைத் தாங்கிக் கொள்ளக் கூடிய சக்தியையும், தைரியத்தையும் தங்களுக்கும் தங்கள் குடும்பத்தாருக்கும் அளிக்க வேண்டும் என்று நான் இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

திரு. M.மணி அவர்களின் மறைவினால் வாடுகின்ற தங்களுக்கும், தங்கள் குடும்பத்தார் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். ”

******

வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9
நாள்: 9.8.2011